குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.

**எஸ்.டி.சி.எண். 1392/2022**

வழக்கு சாட்சி எ.சா.1

2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13-ம் நாள் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய 1வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.S.ராஜேந்திரன், உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Jeya Prakash | தொழில் | |
| த/பெ | | வயது | |
| கிராமம் | | | |
| தாலூக்கா | | | |

**நாள் 13.10.2025**

**முதல் விசாரணை**

2015-2016 பைனான்ஸ் தொழில் செய்து வந்தேன். கண்ணன் என்பவர் மேலாளராக பணிபுரிந்து வந்தார். கையொப்பம் மட்டும் செய்த இரண்டு காசோலைகளை மட்டும் எனது பைனான்ஸில் வைத்திருந்தேன். 2018ல் கண்ணன் என்பவர் கடன் தொல்லை தற்கொலை செய்து கொண்டார். 2018ல் டிசம்பர் மாதம் பைனான்ஸ் மூடியபோது, கணக்கு வழக்கு சரிபார்த்த போது இரண்டு காசோலைகள் காணாமல் போயிருந்தது. அது சம்பந்தமாக வங்கியில் "Stop Payment" கொடுத்திருந்தேன். Account Block ஆனதால், காசோலை செல்லாது எனது தெரிவித்தனர். அதனால் காவல் நிலையத்தில் புகார் ஒன்று கொடுக்கவில்லை. 2021-2022 கொரோனா கால கட்டத்தில் கொரோனா பாதிப்பால் கல்லீரல் பாதிக்கப்பட்டு, மஞ்சக்காமாலையால் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். **அதற்கான மருத்துவ ஆவணங்கள் எ.த.சா.ஆ 1 ஆகும்.** அதனால் யாருடைய உதவியும் இல்லாமல் வெளியே சென்று வர முடியாமல் இருந்தேன். மேலாளர் கண்ணன் என்பவர் எனது காசோலையை Misuse செய்துள்ளார். கண்ணணிடம் பெற்ற காசோலைகளை வைத்து வாதி பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

**(குறுக்கு விசாரணை செய்ய வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).**

**Sd/- Tmt.A.K.Padmapriya,**
**Judicial Magistrate,**
**Kumarapalayam.**